013445

OL/2024 (2025)/81/T-I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

81 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

කෘෂි හා ආහාර තාක්ෂණය I, II
விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும் I, II
Agriculture and Food Technology I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும் I

அறிவுறுத்தல்கள் :

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களின் காரணமாக உள்நாட்டு விவசாயத்திற்கு ஏற்பட்ட தாக்கமானது
(1) குளத்தொகுதிகள் சீர்திருத்தம் மற்றும் நீர்ப்பாசனத் தொழினுட்பவியல் அபிவிருத்தியடைந்தமையாகும்.
(2) பெருந்தோட்டப் பயிர்களை அடிப்படையாகக் கொண்ட வணிக விவசாயப் பொருளாதாரம் தோன்றியமையாகும்.
(3) விவசாயக் குடியிருப்புகள் மற்றும் பலநோக்குத் திட்டங்கள் தோன்றியமையாகும்.
(4) நெல் உட்பட உள்நாட்டு உணவு உற்பத்திகள் அதிகரித்தமையாகும்.

**2.** இலங்கையில் பெரும்போகத்திற்கு பிரதானமாக மழை கிடைப்பது
(1) தென்மேல் பருவக்காற்று மழை மூலமாகும்.
(2) வடகீழ் பருவக்காற்று மழை மூலமாகும்.
(3) முதலாவது இடைப்பட்ட பருவக்காற்று மழை மூலமாகும்.
(4) இரண்டாவது இடைப்பட்ட பருவக்காற்று மழை மூலமாகும்.

**3.** அதிக ஒளிச் செறிவை விரும்பும் பயிர்கள் மாத்திரம் காணப்படும் விடையைத் தெரிவுசெய்க.
(1) நெல் மற்றும் கோப்பி (2) கொக்கோ மற்றும் கோப்பி
(3) மிளகாய் மற்றும் கத்தரி (4) மிளகாய் மற்றும் மிளகு

**4.** வளிமண்டலத்தில் சாரீரப்பதன் அதிகரிக்கும்போது
(1) தாவர நோய்த் தொற்றுகள் குறைவடையும்.
(2) நீர் மற்றும் போசணைகள் அகத்துறிஞ்சல் அதிகரிக்கும்.
(3) காற்று மூலம் மகரந்தங்கள் பரவல் இலகுவாகும்.
(4) தண்டுத் துண்டங்களில் வேர்விடல் சிறப்பாக இடம்பெறும்.

**5.** பின்வரும் பாறைகளில் ஒரு தீப்பாறையாக அமைவது
(1) மாக்கற்பாறை (2) பளிங்குக்கல் (3) மணற்கல் (4) கிரனைட்

**6.** உருட்டல் முறையில் மண்ணின் இழையமைப்பைத் துணியும் போது, ஈரமாக்கப்பட்ட மண்ணை உருட்டி ஒரு மோதிர வளையமாக ஆக்கக்கூடியதாகவிருப்பின் அம்மண்
(1) களிமண்ணாகும். (2) மணல் இருவாட்டி மண்ணாகும்.
(3) களி இருவாட்டி மண்ணாகும். (4) மணல் மண்ணாகும்.

**7.** பயிர்ச்செய்கைக்கு மிகவும் பொருத்தமான மண் கட்டமைப்பு மாதிரி யாது?
(1) தனிமணியுரு (2) நிரலுரு
(3) உபகோணவுருக்குற்றி (4) சிறுமணியுரு

0202000032013445

[பக். 2 ஐப் பார்க்க

**8.** மண் காரத்தன்மை ஏற்படுவதற்கான ஒரு காரணம்
(1) பாசன நீரின் மூலம் மண்ணில் சோடியம் அயன்கள் சேருதல்
(2) அதிக மழைவீழ்ச்சி காரணமாக மூலஅயன்கள் கழுவிச் செல்லப்படல்
(3) மண்ணில் சேதனப் பொருட்கள் பிரிகையடைதல்
(4) அடிக்கடி மண்ணைப் புரட்டல்


**9.** பின்வரும் தாவரக் குடும்பங்களைச் சேர்ந்த பயிர்கள் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடை யாது?

| | குடும்பம் | பயிர் வகைகள் |
|---|---|---|
| A | பொஏசியே | நெல், இறுங்கு, கௌப்பி |
| B | குகர்பிட்டேசியே | பாகல், பீர்க்கு, வெண்டி |
| C | சொலனேசியே | மிளகாய், கத்தரி, தக்காளி |
| D | பெபேசியே | சோளம், சோயாபோஞ்சி, பாசிப்பயறு |

(1) A (2) B (3) C (4) D

**10.** வட்டத் தட்டுக்கலப்பை, இறகுக்கலப்பை, ஜப்பானிய திசைமாற்றக்கூடிய கலப்பை என்னும் விவசாய உபகரணங்கள்,
(1) ஆரம்பப் பண்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படுவதுடன் இயந்திரவலுவினால் செயற்படுத்தப்படும்.
(2) இரண்டாம் நிலைப் பண்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படுவதுடன் விலங்கு வலுவினால் செயற்படுத்தப்படும்.
(3) இடைப் பண்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படுவதுடன் மனிதவலுவினால் செயற்படுத்தப்படும்.
(4) ஆரம்பப் பண்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படுவதுடன் விலங்குவலுவினால் செயற்படுத்தப்படும்.

**11.** பின்வரும் வரிப்படத்தில் காணப்படுவது இரண்டு நாற்று மேடைப் பாத்திகளின் குறுக்கு வெட்டு முகத்தோற்றமாகும்.




இதில் A, B, C, D என்னும் இடங்களுக்கான சிபார்சு செய்யப்பட்ட சரியான அளவுகள் சென்ரிமீற்றர்களில் காணப்படும் விடை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| (1) | 100 | 15 | 20 | 10 |
| (2) | 75 | 10 | 30 | 20 |
| (3) | 80 | 15 | 25 | 20 |
| (4) | 100 | 05 | 30 | 10 |

**12.** நாற்று மேடைகளில் அடிக்கடியேற்படும் 'நாற்றழுகல்' நோயின் நோய்க்காரணி
(1) பற்றீரியாவாகும். (2) பங்கசுவாகும்.
(3) வைரசாகும். (4) வட்டப்புழுவாகும்.

**13.** கத்தரியின் இலைகள் ஒரு வலையைப் போன்று இருக்கத்தக்கதாக இலைகளை உண்ணும் பூச்சியானது
(1) கபிலத்தத்தி ஆகும். (2) அவுலக்க போறா ஆகும்.
(3) எபிலெக்னா ஆகும். (4) குக்கர்பிட் ஈ / cucurbit fly ஆகும்.

**14.** குறைவான வடிகால் காரணமாக
(1) காற்றுவாழ் நுண்ணங்களின் தொகை அதிகரிக்கும்.
(2) மண் இலகுவாக்கப்படுவதனால் விவசாய உபகரணங்கள் பயன்படுத்தல் இலகுவாகும்.
(3) வளியைப் பெறுவதற்காகத் தாவர வேர்கள் மண்ணில் ஆழத்திற்குச் செல்லும்.
(4) தாவர வேர்கள் சார்ந்த பங்கசு நோயேற்படல் அதிகரிக்கும்.

**15.** தூவல் நீர்ப்பாசனம்
(1) தரையில் மண்ணரிப்பை அதிகரிக்கும்.
(2) சாய்வுத் தன்மை கொண்ட காணிகளுக்குப் பொருத்தமான தல்ல.
(3) தாவரங்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும்.
(4) உயரம் குறைவான பயிர்களுக்கு மிகவும் உகந்தது.

[பக். 3 ஐப் பார்க்க

**16.** பின்வரும் அட்டவணையில் தாவரப் போசணைகள் தொடர்பான தகவல்கள் சரியாகக் காணப்படும் விடை யாது?

| | மூலகங்கள் | இடம்பெறும் செயற்பாடு | குறைபாட்டறிகுறி |
|---|---|---|---|
| (1) | N | பூத்தல் | இலை விளிம்புகள் மஞ்சள் நிறமாதல் |
| (2) | P | வேர்த் தொகுதி வளர்ச்சியடைதல் | இலைகள் இலகுவில் உதிர்தல் |
| (3) | K | பச்சையம் உற்பத்தி | முதிர்ந்த இலைகள் மஞ்சள் நிறமடைதல் |
| (4) | Ca | காய்கள் தோன்றுதல் | இலை விளிம்புகள் எரிந்த நிலையடைதல் |

013445

**17.** மண்ணிற்கு உரமிடும்போது உரப் பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடானது,
(1) தாவரத்தின் வேரில்படுமாறு உரமிடலாகும்.
(2) மண் ஓரளவு ஈரநிலையில் காணப்படும்போது உரமிடலாகும்.
(3) டொலமைட்டுடன் கலந்து உரமிடலாகும்.
(4) பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட அதிகமாக உரமிடலாகும்.

**18.** பின்வரும் களைகளில் ஓராண்டுக் களையானது
(1) கோரை (2) கடுகுநாவல் (3) ஆனையடி (4) சீதேவியார் செங்கழுனீர்

**19.** சொலனேசியே குடும்பப் பயிர்களுக்குப் பெரும்பாலும் ஏற்படும் ஒரு பற்றீரியா நோய்
(1) இலைகள் பன்னிறப்படல் (2) நாற்றழுகல்
(3) வாடல் (4) அந்திரக்நோஸ்

**20.** நெற்றாவரத்தின் எப்பருவத்தை அடிப்படையாகக் கொண்டு நெற்பேதங்களின் வயது தீர்மானிக்கப்படும்?
(1) வளர் பருவம் (2) இனப்பெருக்கப்பருவம்
(3) முதிரும் பருவம் (4) அறுவடைப்பருவம்

**21.** தண்டுத் துண்டங்கள் வேர்விடச் செய்தலைத் தூண்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் எளிய சூரிய இனப்பெருக்கி தொடர்பான கூற்றுகள் சில பின்வருமாறு
A - சூரிய இனப்பெருக்கியினுள் உயர் வெப்பநிலையும் குறைவான சாரீரப்பதனும் காணப்படும்.
B - வளர்ப்பு ஊடகமாக மணல், கூட்டெரு மற்றும் மேல் மண் 1:1:1 என்னும் விகிதத்தில் பயன்படுத்தப்படும்.
C - இனப்பெருக்கியினுள் நீர் வடிப்பை மேம்படுத்தல் வேண்டும்.
மேற்படி கூற்றுகளில் சரியான கூற்று / கூற்றுகள்
(1) A மாத்திரமாகும். (2) B மாத்திரமாகும்.
(3) A யும் B யும் மாத்திரமாகும். (4) B யும் C யும் மாத்திரமாகும்.

**22.** குறிப்பிட்ட காணியில் ஒரே கால எல்லையில் இரண்டு வகையான பயிர்களை அல்லது அதற்கு அதிகமான பயிர்களை உரிய இடைவெளியின்றிப் பயிரிடல்
(1) இடைப்பயிர்ச்செய்கை (2) சுழற்சி முறைப்பயிர்ச்செய்கை
(3) கலப்புப் பயிர்ச்செய்கை (4) அஞ்சறப் பயிர்ச்செய்கை


**23.** எலுமிச்சைத் தாவரத்தில் காற்றுப்பதிய வைத்தல் மூலம் கிளையொன்றில் வேர்விடச் செய்வதற்கு எதிர்பார்த்த மாணவனொருவன் அதன் கிளையொன்றில் 2 செ.மீ அளவு வளையமாகத் தோலை நீக்கி அவ்விடத்தில் வேர்விடச் செய்யும் ஊடகத்தை வைத்து நீர் விட்டு பொலித்தீன் தாளினால் சுற்றிக்கட்டினான். இதன் போது தோல் வளையம் அகற்றப்பட்டது,
(1) அவ்விடத்திலிருந்து அதிக நீர் வெளியேற்றப்படுவதனால் தாவரம் அதிகம் நீர் அகத்துறிஞ்சலைத் தூண்டுவதற்காகும்.
(2) அக்கிளையில் உற்பத்தி செய்யப்படும் உணவு தாவரத்தின் வேறு பகுதிகளை நோக்கிச் செல்வதைத் தடுப்பதற்காகும்.
(3) தோலூடாக அக்கிளையின் மேற்பகுதிகளுக்கு நீர் செல்வதைத் தடைசெய்வதற்காகும்.
(4) வேர்விடச் செய்ததன் பின்னர் அக்கிளையைத் தாய்த்தாவரத்திலிருந்து பிரித்தெடுப்பதை இலகுபடுத்துவதற்காகும்.

**24.** மண்ணற்ற பயிர்ச்செய்கையின் போது போசணை ஊடகமாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருள்,
(1) தும்புச் சோறு (2) எரியூட்டப்பட்ட உமி (3) எல்பட் கரைசல் (4) மணல்

0102000032013445

[பக். 4 ஐப் பார்க்க

**25.** பின்வரும் A, B, C மற்றும் D என்னும் வரிப்படங்களில் நாட்டுவதற்காக ஒழுங்குசெய்யப்பட்ட 4 தண்டுத்துண்டங்கள் காட்டப்பட்டுள்ளன.




இவற்றில் நாட்டுவதற்கு மிகவும் பொருத்தமான தண்டுத்துண்டமானது
(1) A ஆகும். (2) B ஆகும். (3) C ஆகும். (4) D ஆகும்.

**26.** இழையவளர்ப்பு தொடர்பான பின்வரும் கூற்றுகளில் **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இழையவளர்ப்பு மூலம் நோய்வாய்ப்பட்ட தாய்த் தாவரத்திலிருந்தும் நோய் பாதிப்பற்ற நாற்றுக்களைப் பெறலாம்.
(2) ஏனைய இனப்பெருக்க முறைகளை விட அதிகளவு நாற்றுக்களை இழையவளர்ப்பில் உற்பத்தி செய்யலாம்.
(3) இழையவளர்ப்பு நாற்றுக்கள் கடினமான சூழல் நிலைமைக்கும் ஈடுகொடுக்கக் கூடியவையாகும்.
(4) இழையவளர்ப்பு நாற்றுக்களைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் கொண்டு செல்லல் இலகுவானது.

**27.** முதிர்ச்சிப் பருவத்தின் அடிப்படையில் நாட்டுவதற்குப் பெறப்படும் தண்டுத் துண்டங்கள் வகைப்படுத்தப்படும். நாட்டுவதற்காகத் தெரிவு செய்யப்படும் மென் வைரத் துண்ட வகைகள்,
(1) வற்றாளை, கோலியாஸ் மற்றும் இன்னல்
(2) ரோசா, குரோட்டன் மற்றும் போகன்விலா
(3) இன்னல், மரவள்ளி மற்றும் கோலியாஸ்
(4) ரோசா, தேயிலை மற்றும் வற்றாளை

**28.** பின்வரும் கூற்றுகளில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) உருளைக் கிழங்கு முகிழ்கள் சூரிய ஒளிக்குத் திறந்து காணப்படின் பச்சை நிறமாவதுடன் அவை உண்பதற்குப் பொருத்தமற்றவை.
(2) கறுத்தகொழும்பன் மாம்பழ வகை ஈரவலயத்தில் பயிரிடப்படின் உரிய தரமான மாம்பழ அறுவடை கிடைக்கும்.
(3) மா, வாழை, பப்பாசி போன்ற பழவகைகளின் அறுவடை, அவை முதிர்ச்சிப் பருவத்தை அடைவதற்கு முன்னர் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(4) விலாட் மாவில் அதற்குரிய சிறப்பியல்பு நிறம் ஏற்படுவதற்கு குறைந்த ஒளி முக்கியமானதாகும்.

**29.** நீரில் கரையாத விற்றமின்கள் மாத்திரம் காணப்படும் விடையைத் தெரிவுசெய்க.
(1) A மற்றும் B (2) B மற்றும் K (3) D மற்றும் C (4) A மற்றும் D

**30.** உணவு பழுதடைவதில் தாக்கஞ் செலுத்தும் ஒரு பௌதிகக் காரணி
(1) நொதியம் சார்ந்த செயற்பாடுகள் (2) ஒட்சியேற்றம்
(3) ஒளி (4) விவசாய இரசாயனப் பொருட்கள்

**31.** வெப்பக் கட்டுப்படுத்தல் மூலம் உணவு நற்காப்பு மேற்கொள்ளப்படும் ஒரு முறையானது
(1) செறிவூட்டல் (2) பாச்சராக்கம் (3) புகையூட்டல் (4) நொதிக்கச் செய்தல்

**32.** மலைநாட்டுப் பண்ணைகளில் வெற்றிகரமாக வளர்க்கப்படும் உயர் பாலறுவடையைத் தரும், கறுப்பு மற்றும் வெண்நிறப் புள்ளிகளும் பெரிய உடலமைப்பும் பெரிய பால்மடியையும் கொண்ட ஒரு கறவைப்பசுவினம்
(1) ஜேர்சி. (2) பிறீசியன். (3) மூறா. (4) நீலிரவி.

**33.** கறவைப் பசுக்களின் கர்ப்பகாலத்தில் இறுதி இரண்டு மாதங்கள் பால் கறக்கப்படமாட்டாது. இக்காலம் அழைக்கப்படுவது
(1) வேட்கைக்காலம் எனவாகும். (2) கர்ப்பகாலம் எனவாகும்.
(3) கன்றீனும் காலம் எனவாகும். (4) வற்றுக் காலம் எனவாகும்.

[பக். 5 ஐப் பார்க்க

**34.** கோழிப்பண்ணையொன்றில் குஞ்சுகள் உணவு உண்ணாமை, இரத்தம் கலந்த கழிச்சல், சோர்வாக செயலற்றுக் காணப்படல், பறவைகள் பெருமளவு இறத்தல் போன்ற அறிகுறிகள் காணப்பட்டன. இவற்றிற்கு ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதக்கூடிய நோயானது
(1) புள்ளோரம். (2) இரணிக்கழ். (3) கொக்சிடியோசிஸ். (4) கோழியம்மை.

**35.** மாடுகளில் பாற்காய்ச்சல் நோயேற்படுவதற்கான காரணம் யாது?
(1) அவரையினத் தாவரங்கள் அதிகமாக உண்ணப்படல்
(2) உணவு சமிபாட்டுத் தொகுதியில் புழுக்களினால் குருதி உறிஞ்சப்படல்
(3) பாலுடன் உடம்பிலிருந்து கல்சியம் வெளியேறல்
(4) மாட்டுக் கொட்டில் மற்றும் மாடுகள் அசுத்தமடைதல்

**36.** பசுக் கன்றுகளுக்குப் போசணை வழங்கல் தொடர்பான கூற்றுகள் சில வருமாறு
A - கன்று ஈன்ற முதல் மூன்று நாட்களுக்கு அவற்றிற்குப் போதுமானளவு கடும்புப்பால் வழங்கப்படல் வேண்டும்.
B - பால்குடி மறக்கும் வரை கன்றுக்குட்டிகள் மந்தைக் கூடுகளில் வளர்க்கப்படல் வேண்டும்.
C - பால்குடி மறக்கும் சந்தர்ப்பத்தில் கன்றுக்குட்டியின் நிறை பிறந்த போதுள்ள நிறையைப் போல இரண்டு மடங்காதல் வேண்டும்.

மேற்படி கூற்றுகளில் சரியான கூற்றுகள்,
(1) A யும் B யும் மாத்திரம் ஆகும். (2) B யும் C யும் மாத்திரம் ஆகும்.
(3) A யும் C யும் மாத்திரம் ஆகும். (4) A, B, C ஆகியவை எல்லாம் ஆகும்.

**37.** மாணவனொருவன் ஒரு நாள் வயதுடைய கோழிக்குஞ்சுகள் 12 ஐக் கொள்வனவு செய்து பேட்டுக் கோழியொன்றின் மூலம் அவற்றிற்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு ஒழுங்கு செய்தான். இதன்போது பேட்டுக் கோழி மூலம் எதிர்பார்க்கப்படும் பிரதான விடயமானது
(1) குஞ்சுகளைச் சுதந்திரமாக வாழ்வதற்குப் பழக்குதல்.
(2) குஞ்சுகளுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குதல்.
(3) குஞ்சுகளுக்குத் தேவையான வெப்பத்தை வழங்குதல்.
(4) குஞ்சுகளுக்குத் தேவையான தாய்ப்பாசத்தைப் பெற்றுக்கொடுத்தல்.

**38.** பல்வேறு காரணங்களினால் வித்து உறங்குநிலையேற்படும். பப்பாசி, தக்காளி மற்றும் கொடித்தோடை போன்ற வித்துக்களின் உறங்கு நிலைக்குக் காரணமானது
(1) முதிர்ச்சியடையாத முளையம் காணப்படல்.
(2) தடித்த வித்துறை காணப்படல்.
(3) வித்துறை, வளி மற்றும் நீரை உட்புகவிடாத நிலையில் காணப்படல்.
(4) வித்துறையில் வளர்ச்சித் தடைப் பொருட்கள் காணப்படல்.

**39.** பாலை உறையச் செய்வதற்காக களி மட்பாத்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம்
(1) பாத்திரத்தின் நுண்டுளை மேற்பரப்பின் காரணமாக நீர் ஆவியாக வெளியேறும் சதவீதம் குறைவடையும்.
(2) களியில் காணப்படும் கனியங்கள் சேர்ந்து தயிரின் போசணை அதிகரிக்கும்.
(3) நீர், வளி மற்றும் நுண்ணங்கிகள் உட்செல்லல் தடுக்கப்பட்டு உணவு பாதுகாக்கப்படும்.
(4) ஒளி உட்பிரவேசித்தல் தடுக்கப்படுவதனால் தயிரின் ஆயுட்காலம் அதிகரிக்கும்.

**40.** உணவுற்பத்தியொன்றிற்கு வழங்கப்படும் SLS சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படுவது,
(1) அதன் தன்மை மாற்றமடையாதவாறு நீண்ட நாட்கள் பேணமுடியும் என்பதாகும்.
(2) அது ஏற்றுமதி செய்வதற்குப் பொருத்தமான நிலையில் உள்ளது என்பதாகும்.
(3) அது சேதனப் பயிர்ச்செய்கையின் மூலம் பெறப்பட்ட ஒரு உற்பத்தி என்பதாகும்.
(4) அது சுகாதாரப் பாதுகாப்பானது மற்றும் உரிய தராதரம் கொண்டது என்பதாகும்.

* *

[பக். 6 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki'

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**81 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

| | |
|---|---|
| කෘෂි හා ආහාර තාක්ෂණය | I, II |
| விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும் | I, II |
| Agriculture and Food Technology | I, II |

## விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும் II

✳ **முதலாம்** வினாவுக்கும் ஏனையவற்றில் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக.

**1.** இலங்கையின் தாழ்நாட்டு ஈர வலயத்தில் 2 ஹெக்டர் தென்னந்தோட்டமும், அதன் அருகில் சிறிய வயற்காணியொன்றுமுடைய கமக்காரரொருவர், வீட்டின் நுகர்விற்காகப் பெறப்படும் பெருமளவு உணவைத் தனது வீட்டுத் தோட்டத்திலேயே உற்பத்தி செய்வதற்கு எண்ணினார்.

(i) அக்காணியின் மண் கழுவிச் செல்லப்படல் காரணமாக அமிலத்தன்மையடைந்துள்ளது. அதில் பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான தன்மையை ஏற்படுத்துவதற்காக இடவேண்டியதொரு பொருளைப் பெயரிடுக.

(ii) அக்காணியில் மண் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளக்கூடிய **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக.

(iii) தென்னைச் செய்கையில் இடைப்பயிர்ச் செய்கைக்காகப் பயிரிடக்கூடிய **இரண்டு** பழப்பயிர்களைப் பெயரிடுக.

(iv) காணியில் காணப்படும் தென்னைச் செய்கையைப் பாதிக்கும் பூச்சிப்பீடையொன்றைப் பெயரிடுக.

(v) காணியில் நீர் வடிப்பு குறைவாகக் காணப்படும் பகுதியில் பயிரிடக்கூடிய **இரண்டு** இலைக்கறிப்பயிர் வகைகளைக் குறிப்பிடுக.

(vi) இப்பகுதியில் நீர்வடிப்பை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய நீர் வடிகாற்றொகுதிகள் (கோலங்கள்) **இரண்டைப்** பெயரிடுக.

(vii) (a) பாலுற்பத்திக்காக இக்காணியில் வளர்ப்பதற்குப் பொருத்தமான இந்திய கறவையினப் பசுவொன்றைப் பெயரிடுக.

(b) புல்லைப் பாதுகாத்துத் தயாரிக்கப்படும் மாடுகளுக்கான உணவுகள் **இரண்டைப்** பெயரிடுக.

(viii) நெல் பாற்பருவத்தில் வித்துக்களின் சாற்றை உறிஞ்சிக்குடிக்கும் பூச்சிப் பீடையொன்றைப் பெயரிடுக.

(ix) நெற்செய்கையில் களைக்கட்டுப்பாட்டிற்காக மேற்கொள்ளக்கூடிய **இரண்டு** வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(x) சேதன உரத்தை மண்ணிற்கு இடுவதனால் ஏற்படும் **இரண்டு** அனுகூலங்களைக் குறிப்பிடுக.

**2.** போதுமானளவு மழைநீர் கிடைக்காதபோது பயிர்ச்செய்கைக்காக நீர்ப்பாசனஞ் செய்தல் வேண்டும்.

(i) (a) மண்ணில் காணப்படும் மண்ணீர் வகைகள் **இரண்டை** எழுதுக.

(b) வெளிக்களக் கொள்திறன் நிலையில் உள்ள மண்ணில் காணப்படும் நீரின் வகைகள் யாவை?

(ii) பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்தப்படும் நீர் அம்மண்ணிலிருந்து வெளியேறும் **நான்கு** முறைகளை எழுதுக.

(iii) பயிர் நிலத்திற்கு இடப்படும் நீரைப் பாதுகாக்கக்கூடிய முறைகள் **மூன்று** எழுதுக.

**3.** சில தாவரங்கள் தமது இனத்தை விருத்தி செய்வதற்காக இனப்பெருக்கக் கட்டமைப்புகளை உற்பத்தி செய்யும். இவை நடுகைப் பொருட்களாகப் பயன்படுத்தப்படும்.

(i) (a) இயற்கைப் பதிய இனப்பெருக்கக் கட்டமைப்புகள் **நான்கைப்** பெயரிடுக.


(b) தண்டுத்துண்டங்கள் வேர்விடச் செய்தலைத் தூண்டுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஓமோன்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) பதியமுறை இனப்பெருக்கத்தின் **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் தனித்தனியாகக் குறிப்பிடுக.

[பக். 7 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

(iii) தண்டுத்துண்டமொன்றை வேர்விடச் செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பொன்று பின்வரும் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதன் போது வளர்ப்பு ஊடகத்திற்கு நீர் விட்டு பொலிதீனின் வாய்ப்பகுதி முடிச்சிடப்பட்டு மூடிய சூழல் ஏற்படுத்தப்படும்.




(a) இக்கட்டமைப்பின் பெயர் யாது?
(b) இக்கட்டமைப்பைத் தயாரிக்கும் போது மூடிய சூழலை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது யாது?

**4.** பயிர்செய்கையின் போது உயர் தரமான அதிக அறுவடையைப் பெறுவதற்காக பீடைக்கட்டுப்பாடு முக்கியமாகும்.

(i) (a) நெற்செய்கையில் இலைகள் உலர்ந்து தாவரங்கள் இறந்து வட்டவடிவானதாக்கப்பட்ட பகுதிகளாகக் காணப்பட்டன. ஒரு பீடைத்தாக்கமான இதனை எப்பெயரால் அழைப்பர்?
(b) இத்தாக்கத்தை ஏற்படுத்தும் பூச்சிப் பீடையைப் பெயரிடுக.
(c) இதனைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கக்கூடிய வழிமுறையொன்றைக் குறிப்பிடுக.

(ii) (a) பயிர்களில் இலைச் சித்திரவடிவ நோயை ஏற்படுத்தும் நோய்க்காரணியைப் பெயரிடுக.
(b) இலைச் சித்திரவடிவ நோய் ஏற்படும் **இரண்டு** பயிர்களைக் குறிப்பிடுக.

(iii) (a) உருவமைப்பின் படி களைகளை வகைப்படுத்திக் காட்டுக.
(b) களைகளினால் தாவரங்களுக்கு ஏற்படும் தீங்குகள் **மூன்று** எழுதுக.

**5.** அடிக்கடி பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதனால் மண்ணின் போசணை படிப்படியாகக் குறைவடையும். இத்தரையை நல்நிலைக்குக் கொண்டுவருவதற்காகப் பசளையிடல் வேண்டும்.

(i) (a) தாவரத்திற்கு வளியினால் கிடைக்கும் போசணையொன்றையும் நீரினால் கிடைக்கும் போசணையொன்றையும் தனித்தனியாக எழுதுக.
(b) பொசுபரசு போசணை கிடைக்கப்பெறும் இரசாயனப் பசளை வகைகள் **இரண்டு** குறிப்பிடுக.

(ii) (a) பயிர்ச்செய்கையின் போது நைதரசனினால் கிடைக்கும் பயன்கள் **இரண்டு** எழுதுக.
(b) தாவரங்களில் காணப்படும் நைதரசன் குறைபாட்டு அறிகுறிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iii) விவசாய இரசாயனங்கள் பயன்படுத்தப்படுவதனால் சூழலிற்கு ஏற்படும் பாதகமான விளைவுகள் **நான்கை** எழுதுக.

**6.** பயிர் அறுவடையை உரிய சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள வேண்டியதுடன் மேலதிக அறுவடையை நற்காப்பிடலும் முக்கியமாகும்.

(i) பின்வரும் சந்தர்ப்பங்களில் மரக்கறிகள் மற்றும் பழவகைகளை அறுவடை செய்வதனால் அறுவடையில் ஏற்படும் பாதிப்புகளைக் குறிப்பிடுக.
(a) உரிய முதிர்ச்சிப் பருவத்தின் முன்னர் அறுவடை செய்தல்
(b) உரிய முதிர்ச்சிப் பருவத்தின் பின்னர் அறுவடை செய்தல்
(c) மழை அல்லது பனி காணப்படும் சந்தர்ப்பங்களில் அறுவடை செய்தல்

(ii) உணவு நற்காப்பின் முக்கியத்துவங்கள் **நான்கு** எழுதுக.

(iii) உணவை நீண்ட நாட்கள் பேணுவதற்காகப் பரிந்துரைக்கப்பட்ட **இரண்டு** நற்காப்புப் பொருட்களைக் குறிப்பிடுக.

**7.** வணிக மட்டத்தில் விலங்கு வளர்ப்பை மேற்கொள்ளும் போது உரிய வளர்ப்பு முறை, விலங்குணவுகள் மற்றும் விலங்கு நோய்களைக் கட்டுப்படுத்தல் போன்றன முக்கியமானவையாகும்.

(i) (a) இலங்கையில் வணிக மட்டத்தில் கோழி வளர்ப்பிற்குப் பொதுவாகப் பயன்படுத்தும் முறையைப் பெயரிடுக.
(b) அம்முறையின் **நான்கு** அனுகூலங்களை எழுதுக.

(ii) (a) கோழிகளுக்கு ஏற்படும் வைரசு நோயொன்றைப் பெயரிடுக.
(b) அந்நோயின் நோயறிகுறிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.
(c) அந்நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய **இரண்டு** முறைகளை எழுதுக.

(iii) கன்று ஈன்ற முதல் நாளில் கன்றுக் குட்டிக்கு செய்யவேண்டிய பரிகாரங்கள் **நான்கு** எழுதுக.

***

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

PARCEL NO

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක
# පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න





කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION | pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

## සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**